# அரசாங்க அறிவித்தல்கள்

## 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபைச் செய்சட்டத்தின் 27(2) ஆம் பிரிவின் கீழ் அதிகாரசபையினால் செய்யப்பட்ட விதிகள்

1. இவ்விதிகள் மகாவலி அதிகாரசபை விதிகள் 1979 என எடுத்தாக்காட்டப்படலாம்.

2. அதிகாரசபையின் பொதுவான நிதித் தேவைக்கென 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் செய்சட்டத்தின் (இதன்பின் செய்சட்டமெனத் தொடர்புறுத்தப்படும்) 26 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியமானது மகாவலி நிதியம் (இதன் பின் நிதியம் எனத் தொடர்புறுத்தப்படும்) எனவறியப்படும்.

3. பணிப்பாளர் அதிபதி அவர்கள், ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் முதல் நாளுக்குப் பிந்தாது அவரால் குறிக்கப்படும் ஒரு திகதியில் அடுத்துவரும் ஆண்டில் அதிகார சபையிடம் கிடைக்கப்பெறும் வருமானம் பற்றிய மதிப்பீட்டினையும், உத்தேசிக்கப்பட்டுள்ள செலவினம் பற்றிய விவரங்களையும் உள்ளடக்கியிருக்கும் வரவு செலவுத் திட்டமொன்றினை அதிகாரசபையிடம் சமர்ப்பிப்பார்.

4. ஒவ்வொரு வரவு செலவுத் திட்டமும் இங்குள்ள சரத்து 3 ல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குக் குறைந்தது ஏழு (7) நாட்களுக்கு முன்னராவது அதிகாரசபைப் பணிப்பாளர்களிடையே சுற்றிப்பரப்பப்படுதல் வேண்டும்.

5. அதிகாரசபையின் முன்னிலையில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு பதினைந்து (15) நாட்களுக்குள் அதிகார சபையானது தனது பணிப்பாளரிற் பெரும்பான்மையோரதும் இடப்பட்ட வாக்குகளிற் ஐந்தில் இரண்டினதும் பலத்துக்கமையச் செயற்பட்டு அதிகாரசபை தீர்மானித்தவாறு திருத்தங்கள் ஏதுவும் இருப்பின் அத்தகைய திருத்தங்களுடன் வரவுசெலவுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும். எனினும், குறிக்கப்பட்ட பதினைந்து (15) நாட்காலப் பகுதிக்குள் அதிகாரசபை இவ்வாறு செயற்படாவிடின் வரவு செலவுத் திட்டமானது அதிகார சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதப்படும்.

6. (அ) பணிப்பாளர் அதிபதி அவர்கள் எவ்வேளையில் ஆவது குறைநிரப்பும் வரவு செலவுத் திட்டமொன்றினைத் தயாரித்து அதனை அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கலாம்.

(ஆ) ஒவ்வொரு குறைநிரப்பும் வரவு செலவுத் திட்டமும் அது சமர்ப்பிக்கப்படவுள்ள பணிப்பாளர்களின் கூட்டத்திற்குக் குறைந்தது ஏழு (7) நாட்களுக்கு முன்னர் ஆவது பணிப்பாளர்களிடையே சுற்றிப்பரப்பப்படுதல் வேண்டும்.

7. சரத்து 5 இன் ஏற்பாடுகள் தேவையான திருத்தங்களுடன் அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்படும் குறைநிரப்பும் வரவு செலவுத் திட்டம் எதற்கும் பொருந்துவதாகும்.

8. ஒவ்வொரு வரவு செலவுத் திட்டமும், ஒவ்வொரு குறைநிரப்பும் வரவு செலவுத் திட்டமும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்குகியைவாக அமைந்திருக்கும்.

9. பணிப்பாளர் அதிபதியும் பணிப்பாளர் அதிபதியால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட நபர் எவரும் வரவுசெலவுத் திட்டத்தினால் அல்லது குறைநிரப்பும் வரவு செலவுத் திட்டம் எவற்றினாலும் அனுமதிக்கப்படும் அத்தகைய செலவினத்தைச் சந்திப்பதற்கான பணத்தை நிதியத்திலிருந்து மீளப்பெறுவதற்கு அதிகாரமளிக்கப்படுவர்.

10. பணிப்பாளர் அதிபதி அவர்கள் அவசியம் எழும்பொழுது எவ்வருடத்திலாவது வரவு செலவுத் திட்டத்தின் அல்லது ஏதாவது குறைநிரப்பும் வரவு செலவுத் திட்டத்தின் தலைப்பின் கீழுள்ள செலவினத்தைக் குறைக்கவோ அல்லது அதிகரிக்கவோ அல்லது ஒரு செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தை வேறொரு தலைப்புக்கு மாற்றஞ் செய்யவோ முடியும். எனினும் வரவு செலவுத் திட்டத்தினால் அல்லது குறைநிரப்பும் வரவு செலவுத் திட்டம் எதனாலும் அனுமதிக்கப்பட்ட மொத்தச் செலவினத் தொகையை அதிகரித்தலாகாது.

11. அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பெற்ற வரவு செலவுத் திட்டம் அல்லது குறைநிரப்பும் வரவு செலவுத் திட்டம் எதனாலும் அளிக்கப்பட்ட செலவினத்திற்கான அதிகாரம் அவ்வரவு செலவுத் திட்டம் தொடர்புறுத்தும் நிதியாண்டின் முடிவில் செல்லுபடியற்றதாகும்.

12. பணிப்பாளர் அதிபதியவர்கள் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்தவுடன் கூடிய விரைவில் அவ்வாண்டுக்காலப் பகுதியில் நிதியக்கணக்கின்மீது வரவு செலவுகளினது தன்மையையும், தொகையையும் காட்டும் கூற்று ஒன்றுடன் கடந்தவாண்டில் தனது நிருவாகம் பற்றிய விரிவான அறிக்கையொன்றைத் தயாரிப்பார். அத்தகைய அறிக்கையும் கூற்றும் அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அதன்மேல் அதிகாரசபையால் ஏற்றுக்கொள்ளப்படும். தீர்மானம் எவற்றுடனும் இணைந்து அது முதலில் அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட திகதியில் இருந்து ஆறு (6) கிழமைகளுக்குள் அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்படும்.

பணிப்பாளர்—அதிபதி,
இலங்கை மகாவலி அதிகாரசபை,
கொழும்பு 10,
31 டிசம்பர் 1979.

3-597—28.03.80 ந் திகதிய வர்த்தமானி இல. 82